# விடியல்

## The Dawn

**மாத இதழ், பொழுது – 72**
**ஏப்ரல், 2015**
**பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்**



**சிறப்பாசிரியர்**
**முனைவர் வே.ராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் பெ.கணேசமுருகன்**
தமிழ்த்துறைத் தலைவர்

**இணை ஆசிரியர்**
**முனைவர் ம.லோகேஸ்வரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்



**வெளியீடு:**

## தமிழ்த்துறை

**கே.எஸ். ரங்கசாமி**
**கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
திருச்செங்கோடு – 637 215,
தமிழ்நாடு, இந்தியா.
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



©K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


## தலையங்கம்

சாலைப்போக்குவரத்துச் சட்டங்கள் நம் நாட்டில் ஏராளம் உண்டு. அதற்கு நிகராக சட்ட மீறல்கள் நிறைய உண்டு. போக்குவரத்துக் காவல் துறையின் ஈடுபாடு இன்னும் முதற்கட்ட பணியைக் கூட எட்டவில்லை என்பது வருத்தமிகுந்த செய்தி. யார் யாரையெல்லாம் சட்டததிற்கு உட்படுத்தக் கூடாது என்று சட்டம் இல்லை. சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம் என்பார்கள். ஆனால் தமிழகததில் பெண்கள் ஓட்டுனர் உரிமம் இன்றி சென்றால் தண்டனை கிடையாது. வெள்ளைவேட்டியில் சென்றால் சோதனை கிடையாது. அதிலும் கட்சிக்கரை வேட்டிகளுடனோ கொடிகளுடனோ சென்றால் நிறுத்தக் கூட செய்வதில்லை. பெண்கள்,பெட்ரோல் டேங்க்கில் குழந்தை என்று ஐந்து பேர் சென்றால் சோதனை இல்லை. இவையெல்லாம் எழுதப்படாத சட்டங்கள். முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாதவர்களைச் சட்டத்தின் முன்பு நிறுத்தி ஒழுங்குபடுத்துவது காவல்துறையின் கடமை. ஆனால் நிலைமை முற்றிலும் வேறு ஒரு எண்ணத்தின் அடிப்படையில் இருக்கிறது. டாஸ்மாக் கடைக்கு மிக அருகில் காவல்துறை வண்டி நிறுத்தப்பட்டு குடிகாரர்களை மட்டும் பிடித்து நிறுத்தி தனது கடமையைக் கவனமாகச் செய்து வருகிறது. இதில் மக்கள் நலம் இல்லை. மாறாக சுயநலம் இருப்பதையே பார்க்க முடிகிறது. இந்தியாவில் அதிகமான ஆஸ்துமா நோயாளிகள் இருப்பதாகத் தகவல் வருகின்றது. இதில் முக்கால்வாசி இரண்டு, நான்கு சக்கர வாகனங்களிலிருந்து வரும் புகையினால் தான். அனவுக்கு அதிகமான புகையினையும் முறையற்ற சத்தங்களையும் கொண்டுள்ள வாகனங்களைச் சிறைப்பிடித்து சாலையில் சுகாதாரத்தை ஏற்படுத்த வேண்டியது போக்குவரத்துக் காவல் துறையின் கடமை.சட்டங்களை மக்கள் மதிப்பதும் மதிக்காமல் செல்வதும் அந்தந்த துறையில் உள்ள மேலதிகாரிகளின் கையில் தான் உள்ளது.

## உள்ளுறை..

### கவிதை


பூவுடன் ஒரு பேட்டி---------------------------5
பெண்-----------------------------------------------3
நட்பு-----------------------------------------------5
அம்மா---------------------------------------------6
பெண் என்பவள்--------------------------------6
மனைவி--------------------------------------------7
நட்பு-----------------------------------------------7
பள்ளிக்கூடம்------------------------------------9
நண்பா--------------------------------------------10
அம்மா--------------------------------------------10
தோழி---------------------------------------------11
பெண்மை-----------------------------------------11
பெண்ணின் பெருமை-----------------------11
அம்மா--------------------------------------------15
தாய்------------------------------------------------15
வாழ்க்கை---------------------------------------16
சாதிக்கப்பிறந்தவர்கள்--------------------16
எது ஊனம்-------------------------------------17
தாய்-----------------------------------------------17
உண்மை அன்பு----------------------------18
நட்பு----------------------------------------------19
தாயான தாய்---------------------------------19
கற்றுக்கொள்---------------------------------18-
உற்சாகம்---------------------------------------18
ஊனம் என்பது-----------------------------20-
மீன்கள்-----------------------------------------21
கருவறையில் அவள்---------------------21
இயற்கையை வெல்லா செயற்கை---22-
மாரி------------------------------------------------23
உனக்குள்ளே---------------------------------23
என் தெய்வத்திற்கு-------------------------23
ஓட்டம்---------------------------------------------24


### கட்டுரை


பெண்கள் நாட்டின் கண்கள்----------14
சாதனைபடைத்த தமிழகப்பெண்கள்7


### சிறுகதை


குடுகுடுப்பை-----------------------------------24


### குறிப்புகள்


அரிஸ்டாடில்------------------------------------4
இந்தியாவின் பெருமை-----------------5
பொது அறிவு-------------------------------16
இல்லை இல்லை-------------------------12
தேசிய பறவை மயில்-------------------13
வாழ்க்கை – மேரிகோம்----------------13
பொது அறிவு-------------------------------16
பொன்மொழிகள்--------------------------20

## பெண்

*கண்கள் இரண்டும் பேசுதே*
*நதியின் அழகைப் போலவே*
*சொற்கள் யாவும் மின்னுமே*
*வானில் தோன்றும் விண்மீன் போலவே*
*கருங்கூந்தல் வாசைன வீசுதே*
*கொடியில் மலரும்*
*அரும்பைப் போலவே*
*கள்ளம் இல்லாத பெண் அவள்..*
*கபடம் இல்லாத தெய்வம் அவள்..*
*பிரம்மனின் தொழிலை*
*மண்ணில் செய்யும்*
*மறக்கமுடியாத தாய் தான் அவள்...*

***வெ.சரண்யா***
***இயற்பியல் முதலாமாண்டு***

## தாய்

*தாய் என்பவள் அன்பானவள்*
*அவளிடம் பாகுபாடு என்பது இருக்காது*
*அழகான உறவான*
*தொப்புள்கொடி வழியாக*
*எனக்கு உணவு ஊட்டி*
*உயிர் கொடுத்தவள்*
*அன்போடு அரவணைத்துப்*
*பாதுகாக்கும் கடவுள் அவள்..*
*வலி கொடுத்து பெற்றெடுத்தாள்*
*எனக்கு வழிகாட்டியாய்*
*துணைநின்றாள்..*
*வலிகளை மறைத்து*
*என்னைச் செதுக்கிய தாயே*
*இன்னொரு ஜென்மம்*
*எனக்கு வேண்டும்*
*உன்னை என் வயிற்றில்*
*சுமப்பதற்காக..*

***ஜெ.வனிதா***
***இயற்பியல் முதலாமாண்டு***

## அம்மா..!

*பிஞ்சு கால்களால்*
*நெஞ்சில் உதைத்த போதும்*
*அன்பு மழை பொழிந்தாயே!*
*சிறுவர் பட்டாளத்தில்*
*ஓடி விழுந்த போதும்*
*தடகள போட்டியில்*
*பரிசிழந்து நின்ற போதும்*
*பரிவுடன் ஊக்கம் கொடுத்த*
*முதல் ஆள்..!*
*பருவ குழந்தையில்*
*பருந்துகளின் கண்களில்*
*மாட்டிய போதும்*
*அடுத்த வீட்டுப் பெண்*
*எடுத்துச் சென்ற போதும்*
*என்னைவிட்டு இருக்காதவளே..*
*கவலை சூழ்ந்த உலகில்*
*பிறப்பதே இன்பம்*
*அதிலும் உனக்குப் பிள்ளையாய்*
*பிறப்பதில் பேரானந்தம்..*
*அம்மா அம்மா*
*உன் மடியில் எனக்கு இடம்தந்து*
*என்னை மீண்டும்*
*அரவணைப்பாயா*

*உயிரோடு அல்லது பிணமாகாவாவது..*

***ச.வசந்தகுமார்***
***இயற்பியல் முதலாமாண்டு***

## அரிஸ்டாடில்

*அரிஸ்டாடில் ஒரு கிரேக்க தத்துவஞானி. கவிதை, நாடகம், இசை, அரசியல் மற்றும் அறிவியல் போன்றவற்றைத் தனது எழுத்துகளில் பிரதிபலித்த ஒரு வல்லுனராக விளங்கினார். மேற்கத்திய தத்துவங்கள் தோன்றுவதற்கு இவரே முக்கிய காரணமானவராகக் கருதப்படுகிறார். அவரின் இயற்பியல் கோட்பாடுகள், பிற்காலத்திய வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தன.*

*நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள அரிஸ்டாடிலின் தத்துவங்கள் தமிழ் உட்பட உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மாவீரன் அலெக்ஸாண்டருக்கு நண்பராகவும் ஆசிரியராகவும் விளங்கினார். உலகின் மிகச்சிறந்த தத்துவஞானிகளில் தலைசிறந்தவர் அரிஸ்டாடில். இவரது முக்கியமான தத்துவங்களில் சில..*

*தைரியம் இல்லாமல் உங்களால் இந்த உலகில் எதுவும் செய்ய முடியாது. மரியாதைக்கு அடுத்து மனிதனின் சிறந்த பண்பு இதுவே..*

*கலையின் நோக்கம் வெளிப்புற விஷயங்களைப் பிரதிபலிப்பதல்ல, உள்ளத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவது.*

*தனித்திறன் என்பது செயல் அல்ல. அது ஒரு பழக்கம்.*

*கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானது. ஆனால் அதன் பழம் இனிமையானது.*

*ஒரு செயலின் நல்ல தொடக்கம் அதனை பாதியளவு முடித்துவிட்டதற்குச் சமம்.*

*இரண்டு உடல்கள் வசிக்கும் ஒரு ஆன்மாவிற்காக உருவானதே அன்பு.*

*எந்த ஒரு பரிந்துரை கடிதத்தையும் விடச் சிறந்தது தனிப்பட்ட அழகே*

*பைத்தியக்காரத்தனத்தின் கலவை இல்லாத ஒரு சிறந்த மேதை எவருமில்லை.*

*மனதின் ஆற்றலே வாழ்க்கையின் சாராம்சம்.*

*சமமற்ற விஷயங்களைச் சமப்படுத்த முயற்சிப்பதே சமத்துவமின்மையின் மோசமான வடிவம்.*

*மகிழ்ச்சியானது நம்மைப் பொருத்தே அமைகின்றது.*

*செயல்பாட்டில் ஏற்படும் மகிழ்ச்சியானது அந்தச் செயலை முழுமைபெற வைக்கின்றது.*

*அனைவருக்கும் நண்பராக இருப்பது என்பது உண்மையில் ஒருவருக்கும் நண்பராக இல்லாததைப் போன்றது.*

***நன்றி : தி தமிழ் இந்து***

## பூவுடன் ஒரு பேட்டி

*இப்பூவுலகில் உள்ள உயிரினங்களின்*
*அன்பிற்குரிய பூவே*
*உனது வாழ்க்கையின்*
*விருப்பங்கள் என்னவோ..?*
*செடியின் முனையில்*
*உன் வாழ்க்கை..*
*உன் கையிலோ பலரின் வாழ்க்கை..*
*இரு மௌனங்களுக்கு இடையில்*
*வார்த்தைகளற்று மலர்கிறாய்..*
*அதில் வாழ்க்கையைத் தருகிறாய்..*
*உன் மென்மையான ஸ்பரிசங்கள்*
*உலகின் முக்கியமான அங்கமாகும்..*
*நான் புன்னகை செய்யும் போது*
*நீயும் புன்னகைக்கிறாய்..*
*என் கண்ணீரின் போது*
*என்னை வருடி விடுகிறாய்..*
*என் அன்பு எல்லையற்றது..*
*இன்பமும் துன்பமும் இருக்கும்*
*உனக்கு நான் என்ன செய்யப்*
*போகிறேன்..*
*நீ இல்லாமல் இப்பூவுலகே இல்லை..*
*உன்னோடு கழிக்கின்ற*
*ஒவ்வொரு நொடியும்*
*என்னுள் புதுப்புது மாற்றங்கள்..*
*தென்றலின் நண்பன் நீ*
*பறவையின் பங்காளி நீ*
*எனது உயிர் நீ..*
*பூவே உனது பூப்பில் தான்*
*உலகின் மகிழ்ச்சியான தருணங்களை*
*அனுபவித்திருக்கிறேன்..*
*நீ பூப்பதும் வாடுவதும் தான்*
*உலகின் மிகப்பெரிய*
*மனித தத்துவம்..*

***பி.சௌமியா, இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு***

## இந்தியாவின் பெருமை

*நேரு ஒரு முறை பெர்ட்ரண்டு ரஸ்ஸலைச் சந்தித்தபோது 'சைபர் நாட்டிலிருந்து வருகின்ற உங்களை வரவேற்கிறேன்' என்றார் ரஸல். ஒன்றுமில்லாதவர் நாட்டிலிருந்து வருகின்றவர் என்று பொருளாகிப் போகிறது. ரஸலின் இத்தகைய வரவேற்பைக் கேட்டதும் நேரு ஒரு கணம் திகைத்துப் போனார். ரஸல் உடனே தெளிவாகி விளக்கமாகக் கூறினார். கணித சாஸ்திரத்தில் பெரிய மேதைகளைப் பெற்ற நாடு உங்களுடையது அல்லவா..? பூஜ்ஜியம் என்கிற சைபர் என்னைக் கண்டுபிடித்தவர் உங்கள் இந்தியர் தானே. அதனால் தான் அந்தப் பெருமையை நினைவுபடுத்தும் விதமாக அப்படிக் கூறினேன் என்றார்.*

*முனைவர் து.சரஸ்வதி*
*தமிழ் உதவிப் பேராசிரியர்.*

## நட்பு

*எனக்கு விக்கல் வரும்போதெல்லாம்*
*நீ என்னை நினைக்கிறாயோ*

இல்லையோ
ஆனால்
நான் நினைத்துக் கொள்வேன்
நீ தான் என்னை நினைக்கின்றாய்
என்று
நான் அடிக்கடி
துன்பப்பட ஆசைப்படுவேன்
ஏனென்றால்
என் தோழமையின்
தோளில் சாய்ந்து
தேற்றிக்கொள்ளுவதற்காக..
கைகோர்ததுச் செல்ல
ஆசைப்படுவதுண்டு
என் வாழ்க்கையின்
உயிர்நாடி என் நட்புதான்
என்பதை உலகிற்கு
உரத்துச் சொல்லுவதற்காக..

***ர.ஹரிபிரியா, இயற்பியல் முதலாமாண்டு***

## வெற்றியின் மறுபக்கம்

எப்போதும் நினைவுக்கு வருவதால்
மறக்க நினைக்கிறேன்
மறக்க நினைபப்பதால்
எப்போதும்
நினைவில் இருக்கிறாய்..
உன்னை நினைக்கும் போதுதான்
வாழக்கையின் அர்த்தம் புரிகிறது..
உன்னை மறக்கும் போதுதான்
வாழ்க்கையில் இறுக்கம் உண்டாகிறது..
நானும் நீயும் இதுவரை
ஆயிரம் முறை சந்தித்துள்ளோம்
ஆனால் ஒரு முறையேனும்
நான் வென்றதேயில்லை..
நீ தான் எப்போதும்
வென்றிருக்கிறாய்..
வாழ்க தோல்வியே..!

***எஸ்.தினேஷ், இயற்பியல் முதலாமாண்டு***

## அம்மா

நான் சுவையாக இருக்கும் போது
நீ உணவாக இருந்தாய்..
நான் தூக்கத்தில் இருக்கும் போது
கண்ணீராய் இருந்தாய்..
உனக்கு வலியை ஏற்படுத்தியதால்
என்னவோ
எனக்கு வலிக்கும் போது
உரத்துக் கூப்பிடுகிறேன்
அம்மா என்று..

***பி.கோகுல், இயற்பியல் முதலாமாண்டு***

## பெண் என்பவள்..

பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்துகொள்ளக் கூடிய
பூஞ்சோலைகள்..
தேய்பிறையை ஏற்கும் நிலவல்ல
என்றும் நிலைத்திருக்கும்
விண்மீன்கள்..
பெண்கள் அடிமைகள் அல்ல
அன்பால் அடிமை செய்பபவர்கள்..
பெண்கள் பிறரைப்
பிரதிபலிப்பவர்கள் அல்ல
பிறரின் பிரதியாக வருபவர்கள்..
பெண்கள் ஆணின்
வேலையாடகள் அல்ல

*தாய்மையின் வேலிகள்..*

**பி.முருககார்த்திகேயன், இயற்பியல் முதலாமாண்டு**

## மனைவி

*சில நேரங்களில் சிரிக்கிறாய்*
*சில நேரங்களில் முறைக்கிறாய்*
*சில நேரங்களில் அழுகிறாய்*
*சில நேரங்களில் பலிக்கிறாய்*
*சில நேரங்களில் மிரளுகிறாய்*
*மொத்தத்தில் நீ இன்னும்*
*குழந்தையாகவே இருக்கிறாய்..*
*இருந்தும் எல்லாவற்றையும்*
*ரசித்துக்கொண்டே இருக்கிறேன்.*
*அன்பு மனைவி உனக்காக..!*

**ஆர்.மோகன்ராஜ்,இயற்பியல் முதலாமாண்டு**

## நட்பு

*புனிதமான உறவுகளே*
*உண்மையானது..*
*மனிதர்களின் மனமே*
*மென்மையானது..*
*தனிமனிதனாய் வாழந்ததால்*
*வாழ்வில் வாட்டம்..*
*அணிதிரண்டு கிடைத்ததோ*
*நண்பர் கூட்டம்..*
*நாளெல்லாம் நண்பனுடனே கழியும்*
*கவலை எல்லாம்*
*காலடியில் ஒழியும்..*
*கும்பிடும் தெய்வம் போல்*
*நாடச்சென்றால்*
*கூப்பிடும் குரலுக்கு*
*ஓடோடி வருவாள்*
*அவள்தான் அன்புத் தோழி..!*

**பி.பிரியதர்ஷினி, இயற்பியல் முதலாமாண்டு**

## சாதனைபடைத்த தமிழகப் பெண்கள்

**வேலுநாச்சியார்**

*வேலுநாச்சியார், வீரமும் நுட்பமான அறிவும் ஒருங்கே அமையப் பெற்றவர். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி.*

*இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்ல முத்து சேதுபதி சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி 1730 ஆம் ஆண் ஒரே பெண் மகளாகத் தோன்றியவர் வேலுநாச்சியார்.*

*பெற்றோரால் ஆண் வாரிசைப் போன்ற வளர்க்கப்பட்டு ஆயுதப்பயிற்சி முதல் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார் சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் வேலு நாச்சியாரை மணந்து கொண்டார்.*

*ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது. அப்போரில் மன்னர் முத்துவடுகநாதர்*

வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார்.

அவருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி ஐயாயிரம் படை வீரர்களை அவருடன் அனுப்பினார். மருது சகோதரர்களுடன் வீரர் படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில் கணகரைக் கொன்றவர்களை வென்று 1780 ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

**அஞ்சலையம்மாள்**

இவர் 1890 ஆம் ஆண்டு கடலூரில் உள்ள முதுநகரில் ஓர் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். 1921 ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போதே அஞ்சலையம்மாள் தனது பொது வாழ்க்கையைத் தொடங்கிவிட்டார்.

நீலன் சிலையை அகற்றும் போராட்டம் உப்புக்காய்ச்சும் போராட்டம், மறியல் போராட்டம், தனியாள் அறப் போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகஜய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல ஆண்டு சிறையில் வாடினார். மேலும் அவர் கடலூர், திருச்சி, வேலூர்ச் சிறைகளில் இருந்த போது கருவுற்ற நிலையில் இருந்த அவரை ஆங்கிலேய அரசு வெளியில் அனுப்பிவிட்டு மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது.

கடலூர் அஞ்சலையம்மாள் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கினார். இவரது பேச்சைக் கேட்பதற்காகவே பலர் திரண்டு வந்தனர். நாடெங்கும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நமைபெற்ற பொழுது சென்னை உட்பட பல நகரங்களுக்குச் சென்று தனது அனல் பறக்கும் பேச்சால் இயக்கததின் வளர்ச்சிக்கு உதவினார். குடும்பச் சொத்துக்களையும் குடியிருந்த வீட்டையும் விற்று விடுதலைப் போராட்டத்திற்குச் செலவு செய்தார். நீலன் சிலையை அகற்றும் போராட்டத்தில் தனது ஒன்பது வயது மகளையும் அதில் ஈடுபடுத்தினார். இவருடன் அவரது மகளும் சிறைத்தண்டனை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகள் சிறையில் இருப்பவர்களைப் பார்க்க வந்த போது ஒன்பதே வயதான அம்மாக்கண்ணு, அஞ்சலையம்மாளின் மகள் என்பதையறிந்து மிகவும் மகிழ்வுற்று அச்சிறுமியைத் தன்னுடன் வார்தாவில் உள்ள ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று லீலாவதி என்று பெயரிட்டுப் படிக்கவும் வைத்தார்.

ஒருமுறை கடலூருக்குக் காந்தியடிகள் வந்த போது அவரைச் சந்திப்பதற்குத் தடை விதித்திருந்தனர். அஞ்சலையம்மாள் பர்தா வேடமணிந்து குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்றிச் சென்றார். அதகால் காந்தியடிகள் அஞ்சலையம்மாளைத் தென்னாட்டின் ஜான்சிராணி என்றழைத்தார்.

**அம்புஜத்தம்மாள்**

இவர் வசதியான குடும்பத்தில் 1899 ஆம் ஆண்டு சனவரி மாதம் எட்டாம் நாள் பிறந்தார். வீட்டிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் எனப் பல மொழிகளையும் திறம்படப் பயின்றார். அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தார். பட்டு, பகட்டு, ஆங்கிலமோகம் அனைத்தையும் துறந்தார். பல்வேறு கட்டுப்பாடுகள் மிகுந்த குடும்பத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு நாட்டு விடுதலைக்காகப் போராடினார்.

வை.மு.கோதைநாயகியம்மாள்

நக்கமணி லட்சுமிபதி முதலானவர்களோடு நட்புக் கொண்டு பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். மகாகவி பாரதியாரின் பாடல்களைப்பாடி விடுதலையுணர்வை ஊட்டினார். ஆங்கிலேய அரசுக்கு எதிராகச் செயல்பட்டார். அந்நியத் துணிகள் விற்கும் கடைகளுக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதால் வேலூர்ச்சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த போதும் மனம் தளராது தான் கற்றுக்கொண்ட மொழிகளைப் பிறருக்குக் கற்றுக்கொடுத்து கல்விப்புரட்சி செய்தார்.

காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று செல்லமாக அழைக்கப்பட்டார். தன் செல்வாக்கையோ தந்தையின் செல்வாக்கையோ பயன்படுத்த விரும்பாமல் நேர்மையான பெண்மணியாக வாழ்ந்து காட்டினார். தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் சீனிவாச காந்தி நிலையம் என்ற தொண்டு நிறுவனத்தை அமைத்தார்

இவர்கள் அனைவரும் நம் நாட்டின் கண்கள்..!

**G.ஸ்ரீபதி, இயற்பியல் முதலாமாண்டு**

**பள்ளிக்கூடம்**

பள்ளி என்ற கலைக்கூடம்
நம் வாழ்வில் சிறப்பிக்கும்
இந்த உலகம்..
சிலையாய் நம்மைச் செதுக்கும்
நல்ல கலையாய்
நம்மை ஆக்கும்..
கேள்வி கேட்கும் ஞானம்

அங்கு பதிலைக் கொடுக்கும்
நல்ஆசான்
வேற்றுமை அகற்றும் பந்தம்
நம் ஒற்றுமை ஒன்றே சொந்தம்..

***பி.பிரியதர்ஷினி, இயற்பியல் முதலாமாண்டு***

## நண்பா..!

காற்றோடு நட்பாயிரு
உன்னைத் தாலாட்டும்..
மழையோடு நட்பாயிரு
அது உன்னை நீராட்டும்..
மனதோடு நட்பாயிரு
அது உன்னைச் சீராட்டும்..
நட்போடு நட்பாயிரு
அது உன்னை உயர்வாக்கும்..
உயிர்களோடு நட்பாயிரு
அது உன்னைப் பாராட்டும்..
சூரியன் கண்விழித்தால்
தாமரை புன்னகைக்கும்..
மழைநீர் கைப்பட்டால்
மலர்கள் புன்னகைக்கும்
நண்பனே!
உன்னைப் பற்றி நினைத்தால்
என்னை மறந்து மகிழ்ச்சி கொள்வேன்
ஆம் நட்பின் அடையாளம்
இந்த உலகில் நாம் தான்..!

***வி.ஜெப்ரின் பெனிக்கர், இயற்பியல் முதலாமாண்டு***

## அம்மா

அன்புக்கு ஒரு கிரகம் இ.ருந்தால்
அதில் நீ தான் ஆண்டவன்..
ஆயிரம் உறவுகள் வரும் போகும்
அவையெல்லாம்
உன் காலடி மண்ணிற்குச் சமம்..
பத்து மாதம் உன் வயிற்றில்
என்னைச் சுமந்தாய்
நானும் சுமக்க வேண்டும்
உன்னை என் நெஞ்சில்
ஆயுள் முடியும் வரை..
கடவுள் முன்னே வந்தாலும்
நூறு வருடம் ஆயுள் தந்தாலும்
அவற்றை உனக்காகவே கேட்பேன்
இறக்கும் தருவாயிலும்
உன் விழிகண்டு இறப்பேன்
என் அம்மா.. என் அம்மா..

***பி.ராஜேஷ், இயற்பியல் முதலாமாண்டு***

## women's day

*when the women get happy*
*No one get worry in life*
*when the women get unhappy*
*some of devils get happy*
*when the women do something*
*some of them crazy about them*
*when the women day comes*
*women's are happy*
*But there is no men's day*
*Because of the cruelness of men's*
*women are so soft in heart*
*men's are only soft in skin only*

*]yes every man victory has women behind him*
*Oh god, why you create women in the world*
*so Beautiful..!*
*Thank god make men's life colorful..*

***S.Aravinth, I B.sc. Physics***

## தோழி

*தோள் சாய நீ இல்லை*
*சுகங்களும் சுமையாகத்தான் உள்ளது..*
*பகிர்ந்து கொள்ள நீ இல்லை*
*அதனை எடுத்துச் சொல்ல*
*வார்த்தையில்லை..*
*கண்ணீரைத் துடைக்க*
*என் விரல்களிருந்தும்*
*அதனை மறந்த*
*உன் பாதை வழியையே*
*எதிர்பார்க்கிறேன்..*
*கடவுள் கண்ணீரைத் தந்தது*
*நீ வந்து துடைக்கத்தானா.?*
*சோகங்களைத் தந்தது*
*உன் ஆதரவான*
*வார்த்தைக்காகவா..?*

***ர.திவ்ய பிரபா***
***இயற்பியல் முதலாமாண்டு***

## பெண்மை

*பிறந்தவுடன் பெண் சிசு*
*கொலையாகிறாள்..*
*அதைத்தாண்டி வளர்ந்தவுடன்*
*வீட்டில் ஒரு சுமையாகிறாள்*
*புகுந்த வீடு சென்றவுடன்*
*அவர்களுக்கு வேலைக்காரியாகிறாள்*
*கடைசியில்*
*நீ என்ன செய்தாய்*
*என்ற வார்த்தைக்கு இரையாகிறாள்..*

***மு.ஜனனி, இயற்பியல் முதலாமாண்டு***

## பெண்ணின் பெருமை

*கனிக்குப் பெருமை சுவை*
*கவிதைக்குப் பெருமை கற்பனை*
*குழந்தைக்குப் பெருமை மழலை*
*இளமைக்குப் பெருமை காதல்*
*ஆசானுக்குப் பெருமை கற்பித்தல்*
*மாணவருக்குப் பெருமை குருபக்தி*
*யானைக்குப் பெருமை தந்தம்*
*மயிலுக்குப் பெருமை தோகை*
*மலருக்குப் பெருமை மணம்*
*வானுக்குப் பெருமை நிலவு*
*வயலுக்குப் பெருமை உழவு*
*குடும்பத்திற்குப் பெருமை*
*கூடிவாழ்தல்*
*புலமைக்குப் பெருமை படைப்பு*
*இசைக்குப் பெருமை ராகம்*
*கன்னியர்க்குப் பெருமை நாணம்*
*இளங்காளையர்க்குப் பெருமை வீரம்*
*தோல்விக்குப் பெருமை பங்கேற்பு*
*வாழ்வுக்குப் பெருமை ஒழுக்கம்*
*பெண்ணுக்குப் பெருமை தாய்மை..*

***வா.கௌரிசங்கர், இயற்பியல் முதலாமாண்டு***

## பொது அறிவு

உலகில் மொத்தம் 252 வகையான உருளைக் கிழங்குகள் உள்ளன.

உலகில் நீண்ட இறகு கொண்ட பறவை - கிரேட் ஆர்கள் பிசண்ட்

முதன்முதலில் நிலவின் மறுபக்கத்தைப் படம் பிடித்த நாடு – ரஷ்யா

டெல்லியின் பழைய பெயர் - சாஜஹானாபாத்

டென்மார்க் நாட்டின் தேசிய சின்னம் - கடற்கரை

அன்னை தெரசாவின் இயற்பெயர் - ஆக்னஸ் கோஷா

50 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ - காக்டஸ்

உலகில் மிகச்சிறிய தேசிய கீதம் - ஜப்பான் (4 அடிகள்)

பிரேசில் நாடுகளில் கிடைக்கும் தேன் - கசப்புச் சுவையுடைது

ராபின் என்ற பறவை தூங்கும் பொது பாடும்

அல்பட்ராஸ் என்ற பறவை பறக்கும் போதே தூங்கும்

வயிற்றில் பல் கொண்ட பறவை – கிவி

குக்குளோ என்ற வண்டினம் ஒளிரும் தன்மை கொண்டவை

இசைக்கருவிகளின் இளவரசி என்று அழைக்கப்படுவது – வயலின்

ஒட்டகச்சிவிங்கியின் கரு வளரும் காலம் - 450 நாட்கள்

**ம.மதிலா, இளங்கலை நுண்ணுயிரியல்**

## இல்லை! இல்லை!

ஈசலுக்கு வயிறு இல்லை
ஈக்களுக்குப் பற்கள் இல்லை
தேளுக்குக் காதுகள் இல்லை
ஆமைக்குப் பற்கள் இல்லை
மண்புழுவிற்குக் கண்கள் இல்லை
வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை
ஆண் கொசுக்கள் கடிப்பதில்லை
வெட்டுக்கிளியும் குழிமுயலும் தண்ணீர் அருந்துவதில்லை
பூச்சிகள், புழுக்கள் தூங்குவதே இல்லை
குளிரி காலத்தில் குயில் இல்லை
குளிர் பிரதேசத்தில் பல்லிகள் இல்லை
கிவி பறவை பறப்பதே இல்லை
வெளவால் முட்டையிடுவதே இல்லை
பறவைகளுக்குச் சிறுநீர்ப்பை இல்லை
கங்காரு தண்ணீர் அருந்துவதில்லை
டிங்கோ என்ற ஆஸ்திரேலிய நாய்கள்
குரைப்பதில்லை
எறும்புகள் தூங்குவது இல்லை
டால்பின் இரண்டு கண்களையும் மூடி
தூங்குவதில்லை

*முதலை, மீன், பாம்பு ஆகியவற்றின்*
*விழிகளுக்கு இமைகள் இல்லை*
*நண்டுக்குத் தலை இல்லை*

***ச.சங்கவி***

***கணினி அறிவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு***

## தேசிய பறவை மயில்

*வெப்ப மண்டல நாடுகளில் ஈரப்பதமான பகுதிகளே மயில்களின் வசிப்பிடம். மரங்களில் ஓய்வெடுக்கும். மழை வந்தால் ஆட்டமிடும்.*

*மயில்களின் குரலும் குயிலிசை போல மெல்லியதுதான் நடக்கும் போது ஒரு ஓசை. கத்தும்போது ஒரு ஓசை. பொழுத அடையும் போது ஒரு ஓசை. விடியும் பொழுது ஒரு சந்தோவிக் கூவல் எனப் பல விதங்களில் ஒலியெழுப்பும்.*

*மயில்கள் தாவர உணவு, மாமிச உணவு இரண்டையும் உண்ணும். அத்திப் பழங்கள் புழு, பூச்சிகள், கரையான்களைக் கண்டால் கொண்டாட்டத்துடன் ருசிக்கத் துவங்கிவிடும்*

*மயில்கள் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் வழக்கமுள்ளவை. 4 முதல் 6 முட்டைகள் வரை இடும்.*

*1972 ஆம் ஆண்டு இயற்றிய இந்திய சட்டப்படி மயிலை வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே தேசியப் பறவையின் வழியாக தேசத்தைக் காப்போம்..*

***ச.சங்கவி***

***கணினி அறிவியல் இரண்டாமாண்டு ஈ பிரிவு***

## வாழ்க்கை – மேரிகோம்

*இந்தியாவில் குத்துச்சண்டை வீராங்கனைகளில் முதன்மையாகத் திகழ்பவர் மேரிகோம். இவர் இந்தியாவிற்காக ஒலிம்பிக் விளையாட்டில் வெண்கலம் மற்றும் 2014 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றவர். மேலும் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் பொட்டிக்கு நேரடிகாகத் தகுதி பெற்றுள்ளார். இத்தனைத் தகுதிகளையும் சாதனைகளையும் இவர் படைத்தது இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவாக ஆன பிறகு தான். அவரின் விடாமுயற்சியும் அவர் வீட்டில் தந்த ஊக்கமும் தான் அவர் வெற்றியின் ரகசியம். மேலும் இவரின் வாழ்க்கை வரலாறு சமீபத்தில் படமாக எடுக்கப்பட்டது. இவ்வளவு பெருமைகளைப் பெற்றுத்தந்தவர் ஒரு பெண். எனவே பெண்களுக்கு முன்னுரிமை அளிப்போம் அனைத்துப் பிரிவிலும் இடம் கொடுப்போம். பெண்கள் நாட்டின் கண்கள் என்பார்கள். அப்படியே நாமும் மதிப்போமாக.!*

**இல.பரணிதரன், இயற்பியல் முதலாமாண்டு**

## பெண்கள் நாட்டின் கண்கள்

பெண்கள் நாட்டின் கண்கள் தாயே கண் கண்ட தெய்வம் இது போன்ற பல மொழிகள் பெண்களைச் சிறப்பிப்பதாய் இருப்பதை நாம் அறிவோம். இப்பழமொழிகளுக்கு ஏற்ப பெண்களும் தங்களை ஆண்களுக்கு நிகராய் தங்களை நிருபித்து வருகின்றனர். இதோ பெண்களைப் பற்றிய செய்திகள்.

**சங்ககால பெண்கள்**

சங்க காலம் என்பது பெரும்பாலும் ஆண்களின் திறமைகளை முன்னிறுத்துவதாய் இருந்தது. ஆனால் அக்காலத்திலும் ஆண்களுக்கு நிகராகத் தங்களின் திறமைகளை நிருபித்திருக்கிறார்கள். அப்போதைய பெண்பாற் புலவர்களில் மிக முக்கியமானவராகத் திகழ்ந்தவர் ஔவையார். இவர் ஒரு பெண்புலவர். காரைக்காலம்மையார், காக்கைப்பாடினியார் ஒக்கூர் மாசாத்தியார் முதலான பெண்பாற் புலவர்கள் மிகுதியாக வாழ்ந்த காலக்கட்டம்தான் சங்ககாலம்.

**வீரத்தில் மகளிர்**

ஆண்கள் மட்டுமே போர்திறமைகளையும் போர் நுணுக்கங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றிருந்த காலததிலும் இராணி லட்சுமிபாய் என்ற பெண் நாட்டிற்காகப் போரில் உயிர் துறந்துள்ளார். அக்கால பணிப்பெண்கள் கூட தற்காப்புக் கலையைக் கற்று வைத்திருந்தனர். பெண்கள் போர்க்களம் செல்லக்கூடாது என்பது வழக்கம். ஆனால் போருக்குச் சென்ற தளது கணவனை எண்ணி மனைவியும் மகனை எண்ணி தாயும் ஒவ்வொரு நாளும் தனது மனம் எனும் போர்க்களத்தில் போராடிக் கொண்டிருப்பதை எவரும் அறியயவில்லை. அறிந்திருந்தால் பெண்கள் போர்க்களம் காணக்கூடாது என்கிற கட்டளையைப் பிறப்பித்திருக்கமாட்டார்கள்.

**அறிவியலில் பெண்கள்**

இன்ற நமது தொழில்நுட்பம் மூலம் கண்டறியும் பல உண்மைகளை அன்று பெண்கள் தங்கள் அனுபவம் மூலம் கூறியுள்ளனர். கனமான பொருள் நீரில் மூழ்கும் கனமற்ற பொருள் நீரில் மிதக்கும் என்பதை அறிந்து கூறியதும் பெண்களே. நீங்கள் சமையலுக்குப் பயன்படுத்தும் பொருள்களை மருந்தாய் பயன்படுத்தி இக்கால மருத்துவத்துறைக்கு வித்திட்டவர்களும் பெண்களே.

**பெண்கள்**

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற கூற்றைப் பொய் என உணர்த்தி இன்று அனைத்துத் துறைகளிலும் தங்களை முதன்மை நிலைக்கு உயர்த்தி வென்று காட்டியுள்ளனர் பெண்கள். தரையில் ஓடும் கட்டைவண்டி முதல் வானில் பறக்கும் விமானம் வரை இன்று பெண்கள் இல்லாத துறைகளே இல்லை. வானமே எல்லை என்பதைத் தாண்டி வானத்தையும் தொட்ட வீரமங்கை கல்பனா சாவ்லா பெண்களின் முன்னோடியாய் திகழ்கிறார்.

**முடிவுரை**

ஒரு தாய் தனது சிசுவை ஈன்றெடுக்க அவள் அடையும் வலி ஒரு மனிதனின் அனைத்து எலும்புளும் உடைவதற்குச் சமம் என்கிறார்கள். எனவே நம்மை ஈன்றெடுத்த தாயையும் தாய் ஸ்தானத்தில் உள்ள பெண்கள் அனைவரையும் போற்றி வாழ்வது நமது பொறுப்பு அன்று கடமை.

**ச.அனுசயா**
**கணினி அறிவியல் ஆ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## அம்மா

கோவில்கள் என்றும்
இருளாகவே உள்ளது
தாயின் கருவறையாக..
பாசம் என்ற வேலிக்குள்
அடைபட்டும் துன்பம்
அடையவில்லை..
இந்த வேலியும் எனக்கு
சுகமாகத்தான் உள்ளது..
உலகெங்கும் சுற்றித் தேடி
வந்துவிட்டேன் கிடைக்கவில்லை
எங்கே உன் கருவறை..?
சுமை என்று எண்ணாமல்
பத்துத் திங்களாய்
என்னைச் சுமந்தாய்..!
உனக்கு நான் செய்யும் காணிக்கை
வரமாக உன்னை நான் என்னுள்
குழந்தையாகச் சுமக்க வேண்டும்..
என்ன தவம் செய்தேனோ
உன்னுள் நான் உருவாக
என்னை மன்னிததுவிடு
வலி என்பதைப் பிறக்கும் போதே
உனக்குத் தந்தமைக்காக..

**எம.கீதாஞ்சலி,இயற்பியல் முதலாமாண்டு**

## தாய்..!

வண்டு வந்து குடிக்காத பூ நீ..
யாரும் வந்து நடக்காத சாலை நீ..
மை கொண்டு எழுதாத டைரி நீ
பிரமன் படைக்காத பெண் நீ
பெண்ணாகப் பிறந்து
என்னைச் சுமந்தவள் நீ..
என்னை முழுமையாக
உருவாக்கியவளும் நீ
என் மூச்சுக்காற்றும் நீ..
இந்த மகளிர் தினத்தன்று
உனக்கு வாழ்த்துச் சொல்லுவதைத்

*தவிர்த்து ஏனோ*
*வணங்குகிறேன்..*

***எஸ்.சங்கரி***
**கணினி அறிவியல் ஆ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## வாழ்க்கை

*வாழ்க்கை ஒரு வாய்ப்பு – அதைப் பயன்படுத்து*
*வாழ்க்கை ஒரு வாக்குறுதி – அதைக் காப்பாற்று*
*வாழ்க்கை ஒரு காதல் - அதைக் காதலி*
*வாழ்க்கை ஒரு வனப்பு – அதைப் புகழ்பாடு*
*வாழ்க்கை ஒரு போராட்டம் - அதனுடன் மல்லுக்கட்டு*
*வாழ்க்கை ஒரு குழப்பம் - அதனைத் தீர்த்துவிடு*
*வாழ்க்கை ஒரு இலக்கு – அதை அடைந்துவிடு*
*வாழ்க்கை தெய்வீகமானது – அதைப் புரிந்துகொள்.*

***ஏ.சர்மிளா***
**கணினிப்பயன்பாட்டியல் ஈ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## பொது அறிவு

*உலகிலேயே பெரிய விதை தேங்காய் தான்*
*தும்மலின் வேகம் மணிக்கு 160 கி.மீ*
*கோழியின் கல்லீரலைப் பயன்படுத்தி ஏ குரூப் ரத்தத்தை ஓ குரூப் ரத்தமாக மாற்ற முடியும்*
*நம் உடலின் 10000 செல்களை ஒரே ஒரு குண்டூசி முனையில் நிரப்பிவிடலாம்*
*பாம்புகளின் விஷச் சுரப்பிகளை கூட விட்டுவைக்காமல் விழுங்கிவிடும் திறமை கீரிக்கு உண்டு*
*மூளை அனுப்பும் செய்திகள் நரம்புகள் வழியாகப் பயணிக்கும் வேகம் மணிக்கு 312 கி.மீ*
*சூரிய ஒளி பூமிக்கு வர சுமார் 8 நிமிடங்கள் ஆகும். சூரியனின் வெப்பம் 10000 செல்சியஸ் மத்தியில் 300000 செல்சியஸ்.*
*முருங்கை, இலவங்காய் மரங்களின் காய்கள் பழுக்காது*
*இந்த நொடியில் உங்கள் வாயில் 10 லட்சத்துக்கும் அதிகமான பாக்டீரியாக்கள் குடியிருக்கின்றன.*

**தொகுப்பு - ஏ.சர்மிளா**
**கணினிப்பயன்பாட்டியல் ஈ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## சாதிக்கப் பிறந்தவர்கள்

*தாயின் கருவறையில் இருட்டில் பிறந்து*
*ஒளிமயமான உலகைக் காணாமல்*
*உணர்வுகளால் கல்வியைக் கற்று*
*இரு கண்களை இழந்து காண*

துடிக்கும் பார்வையற்றோர் நாங்கள்..
பிறப்பில் அழுகையுடன் பிறந்து
மழலைப் பேச்சைப் பேசமுடியாமல்
பார்வையால் அறிவைப் பெற்று
நீதியை மௌனத்தால் பேசும்
ஊமை விழிகள் நாங்கள்..
தாயின் தாலாட்டைக் கேளாமல்
அசைவால் கல்வியை உணர்ந்து
மௌனமாய் வாழ்ந்து உலகை
அமைதியாக்கத் துடிக்கும்
காதுகேளாதோர் நாங்கள்..
பார்க்கவோ நாங்கள்
ஊனமுற்றவர்கள்
மனமோ குறையற்றது
நாங்களும் சாதிப்போம்
இப்பூமியில்...

***பி.சௌமியா***

***இளங்கலை நுண்ணுயிரியல் துறை***

## ***எது ஊனம்.?***

ஊனம் என்று சொன்னார்கள்
உலகமெங்கும்
பாவம் என்று சொன்னார்கள்
பாரெங்கும்
பரிதாபம் கொண்டனர் மக்கள்
மனதெங்கும்
ஆனால் உதவி செய்யத்தான்
ஆட்களில்லை..
கண்கள் வெளிச்சமின்றித்
தீக்குச்சி செய்தோம்
பேச வார்த்தைகள் இன்றி
புல்லாங்குழல் வாசித்தோம்
செவி கேட்கவியலாமல்
சிறுதொழில் புரிந்தோம்
எங்களுக்கும் காலம் வரும்
நாங்களும் வெல்வோம்
சாகும் வரை அல்ல
சரித்திரம் படைக்கும் வரைஸ
ஓயாது உழைப்போம்..

***கே.தீபா, இளங்கலை***

***நுண்ணுயிரியல் துறை***

## ***தாய்..***

பத்து மாதம் சுமந்து பெற்று
கண்ணே மணியே
என்று கொஞ்சி சீராட்டி பாராட்டி
வளர்த்து ஆளாக்கி
பட்டு உடுத்தி
கண்ணுபட போகுதென்று
திருஷ்டி பொட்டிட்டு
பாடசாலைக்குக்
கரம் பிடித்து அழைத்துச் சென்று
நான் பேசும் பேச்சினை
வரிவரியாய் ரசித்துப் பார்த்து
ஒவ்வொன்றும் ஆனந்தம் என்று
தெவிட்டாத இன்பம் கொண்டு
டாக்டராக
இன்ஜினியராக
கற்பனை செய்து
பலகோடி கனவு கண்டு
அதை நிஜமாக்கி
என்னைக் காத்து வளர்த்த தாயே
உனக்குக் கைமாறு
என்ன செய்யப் போகிறேன்..?

**எம்.ஜனப்பிரியா**
**இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

## உண்மை அன்பு

*மலராக இருக்கும் என் மீது*
*இருக்கின்ற துளிகள்*
*பனித்துளிகள் என்று நினைக்காதே*
*நான் வாடாமல் இருப்பதற்கு*
*நீ சிந்திய கண்ணீர்த்துளிகள்..*
*ஆயிரம் மலர்களை வைத்து*
*என்னை அலங்கரித்துவிடுகிறாய்*
*ஆனால் உன்னை நான் அலங்கரிக்க*
*ஒரு பூ கூட*
*கிடைக்கவில்லை*
*இப்பூவுலகில்..*
*தாயே*
*என் சிரிப்பின்*
*பின்னால் உள்ள*
*சோகத்தையும்*
*என் கோபத்தின்*
*பின்னால் உள்ள*
*ஆழ்ந்த அன்பையும்*
*உன்னைத்தவிர வேறு*
*யாரால் உணரமுடியும்*
*சொல் என் அன்புத் தாயே.!*

**எஸ்.கௌசல்யா**
**இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

## கற்றுக்கொள்

*தோல்வி என்பது உன்னை*
*தூங்க வைக்க*
*பாடும் தாலாட்டு அல்ல*
*நீ எழுந்து நிற்பதற்கான*
*தேசிய கீதம்..*
*தெய்வ பயமே ஞானத்தின்*
*தொடக்கம்*
*நீ முடங்கிக் கிடந்தால்*
*சிலந்தியும் சிறைபிடிக்கும்*
*அதுவே எழுந்து நடந்தால்*
*எரிமலையும் வழி கொடுக்கும்*
*தாவுகின்ற போது*
*தயக்கம் காட்டாதே..*
*விழுந்து விட்ட பின்பு*
*விரக்தி கொள்ளாதே*
*தோல்விகள் கூட*
*தோற்றுப் போகிறது*
*ஒவ்வொரு முயற்சிக்குப் பின்னால்*
*கடமையைக் கற்றுக் கொள்*
*சூரியனைப் பார்த்து..*
*விடாமுயற்சியைக் கற்றுக்கொள்*
*கடல் அலையைப் பார்த்து..*
*விடியாத இரவும் இல்லை*
*முடியாத பகலும் இல்லை..*
*உன் முயற்சிக்கு*
*வானமே எல்லை..*

**சே.விவிதா**
**இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

## உற்சாகம்

*விழித்துக்கொள் நண்பனே*
*நீ கரைந்து போகும்*
*நுரைகள் அல்ல*
*பாறை..*
*நீ உருகிப் போகும்*

*பனித்துளிகள் அல்ல*
*உலகத்தின் முதுகெலும்பு..*
*உன் இதயத்தில்*
*பொறிக்கப்பட்ட*
*லட்சியக் கல்வெட்டினை*
*மீண்டும் ஒருமுறை சுத்தம் செய்..*
*விழிக்காத வரை*
*உன் இமைகள் கூட*
*சுமைகள் தான்..*
*சுமைகள் ஒரு நாள்*
*சூனியமாகிவிடும்*
*விழித்துக்கொள்..*

***ச.சிந்துஜா***
***இளங்கலை நுண்ணுயிரியல் துறை***

## *நட்பு*

*நீ என்னோடு மட்டும்*
*பேசிக்கொண்டிருப்பதில்லை*
*நானும் நீயும் கூட*
*அடிக்கடி சந்தித்துக்கொள்வதில்லை*
*ஆனாலும் நமக்குள்ளான*
*நட்பு எனும்*
*உறவுச்சங்கிலி*
*உறுதியாய் கிடக்கும்..*

***கே.சுபாஷினி, இளங்கலை நுண்ணுயிரியல் துறை***

## *பள்ளி எனும் பூங்காவனம்*

*அம்மாவின் கையைவிட்டுப்*
*போகப்பிடிக்காமல்*
*அழுத தருணம்..*
*பிஞ்சு நண்பர்களிடம்*
*புதிதாய் வாங்கிய பேனாவைக்*
*காண்பித்த தருணம்..*
*நண்பர்களின் விதவிதமான*
*மதிய உணவைப்*
*பரிமாறிக் கொண்ட தருணம்*
*வகுப்பறையில் பாடம்*
*சொல்லிக் கொடுக்கும் போது*
*நண்பனிடம் பேசிய தருணம்..*
*இனி எப்போதும் கிடைக்காத*
*இந்தப் பள்ளிப்பருவம்*
*நம் தேசத்தின் பூங்காவனம்..*

***சே.மீனா***
***இளங்கலை நுண்ணுயிரியல் துறை***

## *தாயான தாய்..*

*எனக்கு உயிர் கொடுத்தவள்*
*என் அன்புத் தாய்..*
*நான் மண்ணில் வாழ்வதற்கு*
*உன் கருவில் இடம் கொடுத்தாய்..*
*மூச்சப்பிடித்து வாழ*
*உன் தொப்புள் கொடியைத்*
*தாரைவார்த்தாய்..*
*நான் தூங்க நீ*
*விழித்துக் கொண்டிருந்தாய்*
*நாள் முழுவதும்..*
*நான் பிறப்பெடுக்க*
*உன் உயிரையும் கொடுக்க*
*துணிந்தாய்..*
*நிலாவைக் காட்டி*
*உணவை ஊட்டிவிட்டாய்..*
*அத்தனையும் செய்பவள் பெயர் தான்*

*அம்மா என்றார்கள்..*
*தாய் என்பவள் வெறும்*
*தாயல்ல..*
*பிரமனாய் அவராதம் எடுத்த*
*மனிதக் கடவுள்..*

***ஈ.சரண்யா***
***இளங்கலை நுண்ணுயிரியல் துறை***

### பொன்மொழிகள்

*அநீதி செய்தவன் அதை அனுபவிப்பவனை விட மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகிறான்.*
*ஒவ்வொருவருக்கும் அறிவீனம் உண்டு. ஆனால் வெவ்வேறு பாடல்களில் இருக்கும்.*
*இரும்பு இரும்பைக் கூர்மையாக்குகிறது. அறிஞர் அறிஞரை உருவாக்குகிறார்.*
*சந்தோஷம் என்பது உன்னால் கொடுக்க முடிந்ததைப் பொறுத்தது. வாங்குவதைப் பொறுத்தது அல்ல.*
*சரியாகப் புரிந்து கொள்வதற்கு இருக்கும் இரண்டு எதிரிகள் சினமும் சகிப்புத்தன்மையும்*
*சினத்தை அடக்குவது நல்லது. அதைவிட வராமல் தடுப்பது இன்னும் நல்லது*
*வாழ்க்கையின் மிகப்பெரிய லட்சியம் அறிவல்ல. செயல்தான்.*
*மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்குவது சோதனை நேரம்தான் வெற்றி நேரம் அல்ல.*
*மனிதர்கள் வாழ்வதெல்லாம் செயல்களின் மூலம் தான். யோசனைகள் மூலம் அல்ல.*
*அன்பு என்பது கொடுப்பவரையும் பெறுவவரையும் குணமடையச் செய்கிறது.*

***முனைவர் து.சரஸ்வதி***
***தமிழ்-உதவிப் பேராசிரியர்.***

### ஊனம் என்பது

*ஊனம் ஒரு குறையல்ல*
*வெற்றிக்கு அது தடையல்ல*
*கண் தெரியாதவன் குருடனும் அல்ல*
*காது கேட்காதவன் செவிடனும் அல்ல*
*வாய் பேச முடியாதவன்*
*ஊமையும் அல்ல..*
*மூன்றும் கொண்டவன் ஞானியும் அல்ல*
*விழுந்தவுடன் எழ கால்கள்*
*தேவையில்லை..*
*மனதில் உறுதி இருந்தால் போதும்..*
*கெட்டதைப் பாரக்க நினைப்பவன் குருடன்*
*கெட்டதைப் பேச நினைப்பவன் ஊமை*
*கெட்டதை கேட்க நினைப்பவன் செவிடன்*
*எவ்வளவோ நல்லன உண்டு*
*இவ்வுலகில்..*
*நல்லதை நினைப்பவன் மனிதன்*

*நல்லதைச் செய்வன் தான்*
*மாமனிதன்..*

**அ.ரம்யா**
**இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

### மீன்கள்

*தூண்டில்காரர்களே*
*மீன்கள் நல்லவைகள்*
*அவைகள் ஒருநாளும்*
*மனிதர்களுக்குத் தூண்டிலிட்டதில்லை*
*மீன்கள் வல்லவைகள்*
*உங்களால் தண்ணீரில்*
*சுவாசிக்க முடியுமா..?*
*நீங்கள் முரண்பாட்டு மூட்டைகள்*
*மனிதர்களைக கரை சேர்க்க*
*முடியாத நீங்கள்*
*மீன்களைக் கரையேற்றுவது ஏன்.?*
*நீங்கள் புழுவைக் காட்டி*
*மீ'ன்களை ஏமாற்றுகிறீர்கள்*
*இந்தியத் தண்டனைச் சட்டம்*
*இதனைக் குற்றம் என்று*
*கூறவில்லை..*
*ஆனால் உங்கள் இதயச் சட்டம்.?*

**க.கௌசல்யா, இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

### துடிப்பு

*அந்த நதிக்கரைக்கு என்னை*
*அழைத்துச் செல்லுங்கள்*
*ஆன்மா துடிக்கிறது அங்கே*
*அழைத்துச் செல்லுங்கள்*
*ஓடிக்களைத்துவிட்டேன் உறவில்*
*உள்ளம் சலித்துவிட்டேன்*
*பாடி அலுத்துவிட்டேன் பெரும்*
*பாரம் சுமந்துவிட்டேன்*
*ஓயாமல் அடிக்கின்ற தென்றல்*
*கொஞ்சம் ஓயிலாகச் செல்கின்ற ஆறு*
*சாயாமல் இருக்கின்ற புன்னை அது*
*தமிழ்ப் பேசி வரவேற்கும் என்னை*
*இதயத்தில் என்னென்ன வேட்கை இது*
*இடைவேளை இல்லாத வாழ்க்கை*
*வாழ்வோடு போராட்டம் இங்கே இதில்*
*வாழ்கின்ற நிமிஷங்கள் எங்கே?*
*மலைதொட்டு அடிக்கின்ற சாரல் எந்தன்*
*மடிதொட்டு நனைக்கின்ற தூரல்*
*தூரத்தில் நதியோடும் சத்தம் எந்தன்*
*துயரத்தில் பங்கேற்கும் நித்தம்*
*என்னோடு குயில்பாட வேண்டும்*
*குயிலோடு நான் பாட வேண்டும்*
*கண்ணோடு இமைபாட வேண்டும்*
*நான் காற்றோடு சுதி சேர வேண்டும்*

**க.கௌசல்யா**
**இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

### கருவறையில் அவள்

*பெண்ணே முதல்முதலாக*
*உன்னைத் தாயாகப் பார்த்தேன்*
*சகோதரியாகவும்*
*மனைவியாகவும் நீ துணைநின்றாய்..*

மகள் என்னும் மலராய் தோன்றி
என் வாழ்வில் மகிழ்ச்சியை
ஏற்படுத்தினாய்..
உலகில் வைரமாய் தோன்றி
பல சாதனைகள் புரிந்தாய்..
பெண்ணே உனக்கு
எத்தனை முகங்கள் உண்டோ..?
பத்து மாதங்கள் பத்திரமாய்
பாதுகாத்து வந்து இப்பொழுது
என்னை ஈன்றெடுத்து
ஆணாதிக்க உலகில்
தவிக்க விடப் போகிறாயோ..!
நீ பட்ட துன்பங்களையும் கடந்து
என்னை ஈன்றெடுக்கத் தவிக்கிறாய்..
கருவறையில் கிடைத்த சுதந்திரம்
இனி எனக்குக் கிடைக்கப் போவதில்லை
பெண்ணாய் என்னைப் பெற்றெடுத்து
இந்த மிருகக்காட்டில்
விடத்தான் வேண்டுமா..?
இதற்குத்தான் என்னை
பத்து மாதங்கள் பாதுகாத்தாயோ.?
பெண்ணாய் பிறக்கும் இவ்வேளையில்
என் சுதந்திரம் மண்ணாய்ப் போக
இன்று மிருகங்கள் விரித்த வலையில்
விழுந்தேதான் தீர வேண்டுமா.?
கருவறையில் நான் கதறி அழும்
ஓசை உனக்குக் கேட்கவில்லையா.?
இருப்பினும் நான் மண்ணில்
தவழுவது தான் உனக்கு
மகிழ்ச்சி என்றால்
உனக்காக இதோ வருகிறேன்..

**எஸ்.மேகலா, இளங்கலை**
**நுண்ணுயிரியல் துறை**

## இயற்கையை வெல்லா செயற்கை

இயற்கை பெரியதா?
செயற்கை பெரியதா?
என்று போட்டி நடந்தது உலகில்
செயற்கையே பெரியது என்றான் மனிதன்
இயற்கையே பெரியது
என நிரூபித்தது சுனாமி
மனிதன் பூமியின் மீது
சில அடுக்குகளைக் கட்டி
சுகத்தைக் காண்கிறான்..
அவன் மீ பூகம்பம்
பல அடுக்குகளைப் போட்டு
சோகத்தைக் காண்கிறது..
மனிதா பிறந்து வளர்ந்து
அடக்கமாவது பூமியில்தான்
அதனிடம் வாலாட்டாம்
கொஞ்சம் அடக்கமாய் இரு..
பூமி அடங்கியிருக்கும் போது
பூ காம்பில் இருக்கும்
கோபம் வந்தால்
பூகம்பமாய் மாறும்..
கடல் எல்லாவற்றையும் தரும்
இறைவன்
அதுவே சுனாமியாக மாறினால்
உன் உயிரை எடுக்கும்
எமனாக மாறிவிடும்..
இயற்கையைச் சுரண்டி
வனமாக்குவதைவிட

இயற்கையைப் பலம்
ஆக்குவது புத்திசாலித்தனம்
இயற்கை இவ்வுலகிற்கு
ஜப்பான் மூலம் காட்டியது
படம் அல்ல பாடம்..!

**ஜெ.தயாபிங்கி**
**இளங்கலை நுண்ணுயிரியல் துறை**

## மாரி

புகையினால் ஏற்பட்ட
ஓட்டையினாலும்
காலத்தினாலும் ஏற்பட்ட
மாற்றததினாலும்
மாறி மாறி பொழிகிறதே மாரி..
மரங்களாய்த் தெரிந்த
இடமெல்லாம்
மாடியாய்த் தெரிகிறதே..
நீராய் இருந்த இடமெல்லாம்
வெற்று நிலமாய்த் தெரிகிறதே..
பரந்த வயல்வெளி யாவும்
பாழாய்க் கிடக்கிறதே..
குளம் குட்டைகள் எல்லாம்
பட்டா போட்டு விலை போகிறதே..
இனி மாரிக்கு வேலை இல்லை
மனிதர்கள் வாழ உகந்த
இடமன்று பூமி
என அறிவிப்பு வெகுவிரைவில்
வரப்போகிறது..!

**தெ.கார்த்தி**
**கணினிப் பயன்பாட்டியல் இளங்கலை முதலாமாண்டு**

## உனக்குள்ளே..!

இளைஞனே கடலின்
அழகைப்பார்..
அதற்கும் எழுச்சியுண்டு
வானத்தின் அழகைப்பார்
அதற்கும் இடி மின்னல் உண்டு
பூமியின் அழகைப்பார்
அதற்குப் பூகம்பம்
எனும் தன்மை உண்டு
இளைஞனே
உனக்குள்ளும் பல சிறப்புகள்
உண்டு
விரைவில் உணர்ந்து கொள்
இயற்கையோடு நீயும்
போட்டி போடு..

**பு.மு.ஜீவராணி**
**கணினி அறிவியல் ஈ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## என் தெய்வத்திற்கு

என் அம்மாவை
நான் தேடும் பொழுது
என்னருகில் இல்லாமல் இருக்காலம்
ஆனால் என் அம்மாவை
நினைக்கும் ெபாழுது
நீக்கமற நிறைந்து வழிகிறாள
நெஞ்சம் ழுழுவதும்..
என் நட்பிற்கு
நிலா இல்லாத நாள் கூட உண்டு
என் நண்பன் இல்லாத
நாட்களை நான்
நினைத்துப் பார்த்தது கூட இல்லை

காரணம் நட்பு என்பது
விதியால் வருவது அல்ல
காலத்தால் கட்டப்படுவது..
வாழ்க்கை
இன்று நீ எதனை செய்ய
நினைத்தாலும்
அது கசப்பாக இருக்கும்
ஆனால் அதனை செய்து முடித்தவடன்
நினைத்துப் பார்த்தால்
இனிப்பாக இருக்கும்
கசப்பு, இனிப்பு இருந்தால் தான்
வாழக்கை
இல்லையென்றால்
அது வேடிக்கை..

**டி.கார்த்திக்**
**கணினி அறிவியல் ஈ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## ஓட்டம்

நிறம் வற்றிப்போன மலரை
நிஜம் தாங்கி நிற்பதில்லை
குறையத் தொற்றிக்கொண்ட செயலை
நிறை தாங்கி நிற்பதில்லை
மனம் உடைபடாமலிருக்கும் வரையே
உஸ்னம் உயிர்ப்போடு இதயத்தில்
முட்டும்
குணம் சிதைபடாமலிருக்கும் வரைதான்
சிந்தனை நலமோடு
மூளையை எட்டும்..
கனவே அட கனவே
உன் வேலை முடியும் வரை
நீ என்னைத் தூங்கவிடாதே
நினைவே அட நினைவே
உனது நாளை தொடர
வேண்டுமானால்
நீ என்னை விட்டு நீங்கிவிடாதே
நான் ஓடும் இடத்தில்
பாதையில்லை
நான் தயங்கி நின்றால்
கால்களில் உணர்வே இல்லை
நான் காணும் திசையில்
ஒயியேயில்லை..
நான் பயந்து கொண்டால்
கண்களில் பார்வையேயில்லை..
இப்பொழுதுதான் புரிகிறது
பயமற்ற பார்வையே
நம் திசையினை வெளிச்சமாக்கும்
நாம் போகும் இடமெல்லாம்
நாளை பிறருக்குப் பாதையாகும்
என்ற உண்மை..
அதன்பின் என் ஓட்டம்
இன்னும் வேகமானது..

**ஜே.சேதுபதி**
**கணினி அறிவியல் ஈ பிரிவு இளங்கலை இரண்டாமாண்டு**

## சிறுகதை - குடுகுடுப்பை

தூரத்தில் நாய் ஊளையிடுவதை அரைத் தூக்கத்தில் இருந்த காந்தமதி கேட்டு விழிக்கத் துவங்குகிறாள். ஏன் இந்த நாய் பக்கிக இப்படி ஊளையிடுதுக.. மனுச தூக்கத்த கெடுத்துக்கிட்டு.. காந்திமதி இப்படி

*முணங்கிக்கொண்டிருக்கும் போது மணி நள்ளிரவு 1.40. இதை ஏதோ ஒரு வெளிச்சத்தில் கடிகாரத்தைப் பார்த்து பெரிந்து கொண்டால்..*

*தூங்கப்போனவள் திடீரென எழுந்து ஒருவேள குடுகுடுப்பக்காரன இருப்பானோ..? என்னனு பாத்துடலாமா..? ஆனா மாமியா பாக்கக்கூடாதுனு சொன்னுச்சே..! சன்னலோரமா நின்னு பாக்கலாம்னு மனசுக்குள்ள நெனச்சிட்டு இருந்தா காந்தழமதி.*

*நாய் சத்தத்துல குடுகுடுப்ப சத்தத்தக் காணோம்..*

*பக்கத்துல வந்துட்டானு நெனக்கிறேன்.. குடுகுடுப்ப சத்தம் இப்பதான் நல்லா கேட்குது.. பக்கத்து வீட்டு சித்ரா வீட்டுக்கு சொல்லிக்கிட்டு இருக்கான்.. இன்னிக்கு வரட்டும் ஏதாச்சும் கேட்டுடலாம்னு மனதில் நினைத்துக்கொண்டே இருக்கிறாள்..*

*நல்ல காலம் பொறக்குது நல்ல காலம் பொறக்குது. டுர்ர்ர்ர் டுர்ர்ர் டுர்ர்ர்ர் இந்த வீட்டுல ஒரு சாவு விழப்போகுது.. அந்த சாவுக்குப் பின்னால இந்த வீட்டுல நெறய நல்லது நடக்கப் போகுது.. ஆம்பளயாளுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்கப்போகுது.. சக்கம்மா சொல்றா சக்கம்மா சொல்றா… னு சொல்லிக்கொண்டே அடுத்த வீட்டுக்குப் போயிட்டான் குடுகுடுப்பை.*

*காந்திமதிக்குத் தூக்கமே வரலை. ஒரே மனப்போராட்டம். நல்ல காலம் னு சொல்லிட்டு சாவு விழப்போதுனுட்டுப் போறான். சரி காலையிலதான் வருவான்ல முழுசா கேட்டுப்புடுவோம். புரண்டு புரண்டு படுக்கிறாள். பொழுது புலர்ந்தது.*

*குடுகுடுப்பைக்காரன் காலையில் சித்ராவிடம் எதையோ காரசாரமா பேசி பை நிறைய அரிசியையும் கையில் எவ்வளவோ பணத்தையும் வாங்கிக்கொண்டு வேக வேகமாக நடந்து வருகிறான்.*

*அம்மா தாயி..*

*இந்தா வாரேன்*

*இந்த வீட்டுல நெறய நல்லது நடக்கப்போவுதுமா தாயி..*

*ஏன்யா ராத்திரி இந்த வீட்டுல எழவு விழப்போவுதுனு சொன்னீங்க..*

*கேட்டுட்டியா தாயி. அப்படித்தான் சக்கம்மா சொன்னா.*

*ஏன்யா வாயில நல்லதே வராதா..?*

*கவலைப்படாத தாயி. பரிகாரம் இருக்கு. அஞ்சு கிலோ பச்சரிசி. தேங்காய் பழம் ஊதுபத்தி. 101 ருவாய கொண்டு வா. இங்க உள்ள பிரச்சனைய உடனே தீத்துடுறேன். உங்க வீட்டுல மாரியம்மன் துணை இருக்கு தாயி. தொட்டதெல்லாம்*

*துலங்கும். கவலைப்படாம நான் சொன்னத எடுத்துட்டு வா தாயி.*

*எல்லாத்தையும் முறைப்படி வைத்து பூசை மாதிரி செய்யத் துவங்கினான் குடுகுடுப்பை*

*மாமியா, மருமகள் இருவரும் அவன் சொன்னபடியெல்லாம் செய்து முடித்தனர். பூசை முடிந்தது. எல்லாப் பொருள்களையும் தனது சாக்குப்பைக்குள் வைத்துத் திணித்துக்கொண்டிருந்தான் குடுகுடுப்பை.*

*101 ரூபாயையும் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு தீட்டு கழிந்தது. சாவ மாத்தியாச்சு தாயி. இனி கவலைப்படாம இருங்க. இன்னும் ஒரேயொரு பரிகாரம் உண்டு அத பின்னாடி பாத்துக்கலாம். வர்றேன் தாயி..*

*குடுகுடுப்பை ஏமாத்துறானு தெரிஞ்சும் காந்திமதி எல்லாவற்றையும் செய்து முடித்தாள். ஒருவழியாக மனப்பிரச்சனை முடிந்தது அவ்வளவுதான்.*

*சந்தைக்குப் போவதற்காக வேகவேகமாகக் கிளம்பிக்கொண்டிருந்தாள். குறுக்கு வழியில் நடந்து காய்கறி வாங்கி வருவதுதான் அரசபுரத்து மக்களின் வழக்கம். அரசபுரத்திலிருந்து இரண்டு மைல்தான் முடத்தூர். முடத்தூர் சந்தைதான் சுத்துப்பட்டியில் பெரிய சந்தை.*

*மாமியாருக்குச் சமைத்து சாப்பாடு வைத்துவிட்டு கிளம்பும் பொழுது மணி 11 ஆகிவிட்டது. அவசர அவசரமாக நடையைக்கட்டினாள். செல்லும் வழியில் யாரோ அடிபட்டுக கிடப்பதைக் கண்டு சற்றுத் திகைத்துப்போனாள் காந்திமதி.*

*அய்யய்யோ யாருனு தெரியலயேனு வேகமாக அருகில் சென்று உற்றுப்பார்த்தாள். விபத்து இல்லை குடித்துவிட்டு எவனோ ஒருவன் விழுந்து கிடக்கிறான்.*

*எதற்கு வம்பு என்று கண்டுகொள்ளாமல் வேகமாகச் சென்றவள் மீண்டும் திரும்பிப் பார்க்கிறாள் அது குடுகுடுப்பைக்காரன்…*

*வேகவேகமாக நொந்து கொண்டே நடையைக் கட்டினாள்..*

***பச்சியன்னன்***

***இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு***

## *கோபம்*

*புதிதாய் உதித்த காலையில்*
*தேசிய நெடுஞ்சாலையில்*
*பேருந்தில் அமர்ந்மு கொண்டு*
*உன் பூ முகம் பார்க்கையில்*
*அத்தனை இன்னல்களும்*

*அடியோடு அறுக்கப்படுகிறது..*
*வாழக்கையின் மீதான*
*நம்பிக்கை பிறக்கிறது*
*உண்மையில் குழந்தைகள்*
*வாழ்க்கையின் வரப்பிரசாதம்..*

***ரா.கலையரசன்***
***கணினி அறிவியல் ஈ பிரிவு இளங்கலை முதலாமாண்டு***

***எழுத்தாணி – 6***

## குன்றம் பார்த்துப் பழகுதல்

*சங்ககாலத்தில் ஏராளமான பழக்கவழக்கங்கள் தமிழர் மரபுடன் ஒன்றியிருந்துள்ளன. அவற்றுள் காதல் நிகழ்வு மிக முக்கியமானதாகும். அலர் (புரணி பேசுதல் எனக் கொள்க) காரணமாகத் தலைவியை வீட்டுக்குள்ளேயே அடைத்து கடுமையான காவலினை வைத்துவிடுகின்றனர். தலைவி தலைவனின் பிரிவுத்துயரம் தாங்க முடியாமல் உடல் மெலிந்து வளையல் கழன்று விழும் வண்ணம் நெற்றியில் பசலை படர்ந்து சோக நிலையில் காட்சியளிக்கிறாள். தலைவியைக் காவல் காத்த அவளது உறவினர்கள் என்னமோ ஏதோ என்று நினைத்து, அதாவது பேய் பிடித்துவிட்டதாகக் கருதி வேலனிடம் வெறியாட்டு நிகழ்த்த செல்கின்றனர் அப்போது தோழியானவள் செவிலித் தாயிடம் தலைவியின் உடல் மெலிவிற்கான காரணத்தைக் குறிப்பிடுகிறாள். பாடலைக் கொஞ்சம் படியுங்களேன்..*

*அன்னாய் வாழி வேண்டன்னை நம்படப்பைப் புலவுச்சேர் துறுகல் ஏறி அவர் நாட்டுப் பூக்கெழு குன்றம் நோக்கி நின்று மணிபுரை வயங்கு இழை நிலைபெறத் தணிதற்கும் உரித்து அவளுற்ற நோயே*

*இந்தச் செய்யுளை இயற்றியவர் கபிலர். குறிஞ்சி நிலத்தில் நடக்க்கூடிய நிகழ்வினைப் புலவர் எடுத்துக்காட்டியுள்ளார். பாடலின் பொருளைப் புதுக்கவிதை வடிவில் காணலாம்.*

**புதுக்கவிதை வடிவம்**

*என் தலைவியின் தாயே*
*கொஞ்சம் நான் கூறுவதைச்*
*செவியில் விரும்பி*
*ஏற்றுக்கொள்வாயாக..*
*தலைவியின் உடல் மெலிவிற்கு*
*அணங்கு காரணம் அல்ல*
*அவளை வருத்தும்*
*ஒரு ஆடவன்..*
*நம் தோட்டத்தில்*
*புலால் நாற்றம் வீசக்கூடிய*
*குண்டுக்கல்லில் ஏறிநின்று*
*தலைவி தினம்தினம்*
*ஒரு காட்சியைப் பார்ப்பது வழக்கம்*
*நெருக்கமாகப் பூத்துள்ள*
*பூக்களை உடைய மலையொன்று*

தெரிகிறதா..?
நீலமணி போன்ற நிறத்தையொத்த
குன்று ஒன்று தெரிகிறதா..?
அவற்றைக் காண்பித்தால் போதும்
தலைவியின் வளையல் நெகிழாது
உடல் மெலிவு கொள்ளாது
அச்செயல் ஒன்றை இப்போதே
தலைவி செய்தாளானால்
அவளின் மனத்துயரம்
பிரிவுத்துயரம் நீங்கி
செழிப்பமாவாள்..
இது உறுதி..
இதைத் தவிர வேறு காரணம்
யாமறியேன்..

**உரைவடிவம்**

அன்னையே! நீ வாழ்வாயாக நான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக. நம் தோட்டத்தின்கண் புலால் மணம் வீசக்கூடிய குண்டுக்கல் ஒன்று உள்ளது. அதில் ஏறி நின்று பூக்கள் நிறைந்ததும் நீலநிறத்தை ஒத்ததும் ஆன குன்றத்தை நோக்கினாள் எனின் தலைவியின் அணிகள் நெகிழாது. அவை மேலும் கழலாது அவ்வாறே இருக்க அவளை வாட்டும் பிரிவுத்துயரம் தணிதற்கும் உரியதாகும்.

**கருத்து**

தலைவி குணமடைய வேண்டுமானால் வெறியாட்டு நிகழ்த்துவது தேவையன்று. தலைவனின் குன்றத்தைக் காண்பித்தால் போதுமானது. உயிர் பெறுவாள்.

**அரிய சொல் விளக்கம்**

துறுகல் - குண்டுக்கல்(ஆடு முதலானவற்றைப் பலியிடுகின்ற கல்.) புலவு – புலால் நாற்றம், இழை – அணிகலன்கள், வெறியாட்டு – முரகனுக்கு எடுக்கின்ற பூசை. பசலை – உடலில் ஏற்படுகின்ற நிற மாற்றம்.

**அகரன் - தமிழ்த்துறை**

## தொகுப்புக் கவிதைகள்

**நட்பு**

வாழ வைப்பவன் இறைவன்
வாழத் தெரிந்தவன் மனிதன்
விழ வைப்பவன் துரோகி
தூக்கி விடுபவன் நண்பன்

**தனிமை**

தேவை முடிந்தவுடன் விலகும் நண்பர்கள்
சொத்து இருந்தால் உறவாடும் சொந்தங்கள்.
பணம் இருந்தால் பாசம் காட்டும் பந்தங்கள்
இவர்களுடன் நாம் இருப்பதை விட தனியாக வாழ்வது எவ்வளவோ மேல்..

**வாழ்க்கை**

வாழக்கையில் யாரையும் சார்ந்து
வாழ்ந்து விடாதே
உன் நிழல் கூட வெளிச்சம்
உள்ளவரைதான் உனக்குத்

துணைநிற்கும்
யாரையும் சாராத வரை தான்
நீ நீயாக இருக்க முடியும்..
இல்லையேல்
உனது வாழ்க்கையை
வேறொருவன் வாழ்ந்து
கொண்டிருப்பான்..

**கவிதை**

கவிதையில் க போனால் விதையாகும்
ஆம் எத்தனையோ எண்ணங்கள்
கவிதை நூல் மூலம்
விதைக்கப்படுகின்றன
இந்தக் கவிதையில் வி போனால்
கதையாகும்
ஆம் எத்தனையோ கதைகள்
இந்தக் கவிதை நூலில்
உருவாக்கப்படுகின்றன
இந்தக் கவிதைகயில் தை போனார்
கவியாகும்
ஆம் கவிதானே கவிதையை எழுத
முடியும்
எனினும் எனக்குக்
கவிதை தெரியாது..

**அ.பார்த்திபன்**
**கணினிப் பயன்பாட்டியல் ஈ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## பொது அறிவு

உலகின் முதல் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டரின் பெயர் என்ன?
இனியாக்

புகழ்பெற்ற லைலா மஜ்னு காதல் காவியத்தின் ஆசிரியர் யார்?
நிஜாமி

வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு?
1892

விளையாட்டுப் பொருள்கள் இந்தியாவில் அதிகம் தயாரிக்கப்படும் நகரம் எது?
ஜலந்தர்

அமெரிக்காவில் ஒரு லட்சத்தை எப்படி அழைக்கிறார்கள்?
100 ஆயிரம்

விலங்குகளிலேயே மிகவும் சிறிய இதயத்தைக் கொண்டது?
சிங்கம்

உடலில் ரத்தம் பாயாத ஒரேயொரு பகுதி?
கண்ணின் கருவிழி

உடலில் காயம் ஆறுவதற்கு எது தேவை?
வைட்டமின் சி

சென்னைப் பல்கலைக்கழகம் எப்பொழுது தொடங்கப்பட்டது?
1857

இந்தியாவில் முதன்முதலில் மதுவிலக்கு அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டம்?
சேலம்

இரும்புத் தொழிலின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?
டாட்டா

*bulls Eye என்னும் சொல் பயன்படுத்தப்படும் போட்டி எது?*
*துப்பாக்கிச்சுடும் போட்டி*

**தொகுப்பு – மா.ஜெகநாதன்**
**கணினிப் பயன்பாட்டியல் ஈ பிரிவு**
**இளங்கலை முதலாமாண்டு**

## மகளிர் தினவிழாச் சிறப்புக் கவிதை

*உயிர் துறக்க ஒரு நொடி*
*துணிச்சல் போதும்*
*ஆனால் உயிர் வாழ*
*ஒவ்வொரு நொடியும்*
*துணிச்சல் வேண்டும்...*
*இவ்வுண்மையை உலகுக்கு*
*உணரச்செய்தவள் நீ*
*ஓருயிர் புவிக்கு வர*
*உன் உயிரைப் பணயம் வைத்தாய்*
*அவ்வுயிர் நடமாட*
*உன் உதிரத்தைப் பாலாய் வார்த்தாய்*
*அன்னையாய் அன்பைப் பொழிந்தாய்*
*மனையாளாய் குடும்பத்தைக் காத்தாய்*
*மகளாய் தந்தையைத் தாங்கினாய்*
*அனைத்து உறவும் உன்னால் விளைந்ததே*
*பெண் பிறப்பு சாபம் என்றது போய்*
*இன்று பெண்ணினம் தேவை என்றாயிற்று*
*எழுந்து நில் உன் அடிகளின் வலிமை*
*நீ பயணித்தால் தான்*
*உலகுக்குத் தெரியும்..*
*கரண்டி ஏந்திய கைகள் இன்று*
*கணினியை இயக்கும் காலமாகும்*
*இல்லத்தரசியே இரக்கத்தின் ஊற்றே*
*இறைவனின் அடுத்த நிலையே*
*நீயின்றி இவ்வுலகில்லை..*

**எம்.ஜெயந்தி**
**வணிகவியல்-உதவிப்பேராசிரியர்**

## எனக்கான ஒருத்தி

*என் சந்தோசத்திற்காக வாழ்ந்த ஒருத்தி*
*என் வருத்தத்தில் துணையாய் நின்ற ஒருத்தி*
*என்னையே உலகம் என்று வாழ்ந்த ஒருத்தி*
*எனக்காக இன்ப துன்பங்களை*
*மறைத்து வாழ்ந்த ஒருத்தி*
*என் கல்விக்கு ஊன்றுகோலாய் இருந்த ஒருத்தி*
*எனக்குச் சிறந்த ஆசானாக இருந்த ஒருத்தி*
*எனக்கு ஆருயிர் தோழியாய் இருந்த ஒருத்தி*
*எனக்குதட தாயும் தந்தையுமாய் இருந்த ஒருத்தி*
*எங்கே அவள்?*
*அவள் சுவாசித்த மூச்சுக்காற்றின்*
*மீதம் இங்கிருக்க அவள் மட்டும் எங்கே?*
*அவளனி ரத்த நாளங்கள்*
*வெற்றுக்குழாயாக இருக்க*

உரமூட்டும் அணுக்களாகிப் போன
அவள் எங்கே?
நான் பழகிய முதல் பெண்ணும்
இறுதிப் பெண்ணும் அவள் தான்..
வணங்குகிறேன் பெருமிதத்துடன்
என் அன்புத் **தாயே..!**

**வெ.அபிநயா**
**கணினி அறிவியல் ஈ பிரிவு, இளங்கலை இரண்டாமாண்டு**

## கவிதை வெளி

கவிதை எழுப்பித்தானே
காலையில் நான் துயில் களைந்தேன்
கவிதை நீரில் தானே முகம் கழுவினேன்
கவிதையின் தூரிகை கொண்டல்லவா
வீட்டினை நான் தூய்மையும்
ஒழுங்கும் செய்தேன்
கவிதையின் படகிலேறியன்றோ
அண்டை வீட்டார்களுடனும்
அந்நியர்களுடனும்
உறவு கொண்டேன்..
கவிதையின் நெருப்பினிலன்றோ
சோறு வடித்தேன்..
கவிதையின் அரிவாள்மனை
அமர்ந்தல்லவா
காய்கறிகள் நறுக்கினேன்..
கவிதையின் வாகனத்திலேறித்தானே
அலுவலகம் சென்றேன்..
கவிதையின் கிண்ணத்திலன்றோ
தேநீர் பருகினேன்
கவிதையின் ஒளியிலல்லவா
தகதகத்துக் கொண்டிருந்தது
இயற்கை
கவிதையின் பொன்
வெளியிலல்லவா
நாளும் என் சிறு உலா நடந்தது
கவிதையின் மொட்டை
மாடியிலன்றோ
வான் பார்த்து நின்றேன் நான்..
கவிதையின் நாற்காலிகளில்
அமமர்ந்து
கொண்டல்லவா பிரச்சனைகளை
ஆராய்ந்தோம்
மூடத்துயர் மிகுந்து கொண்டே
வரும்
இவ்வலகில் மனித முயற்சிகள்
அனைத்தும்
வீணாகிக் கொண்டிருக்கும்
இச்சாமபல் வானத்தின் கீழே
வாழ்வின் அரும்பொருள் வினை
இதுவென
எப்போதும் உணர்த்தும் நிலையில்
தானே
எரிநது கொண்டிருந்தது அங்கே
கவிதை வெளி..

**ப.பிரியதர்ஷினி**
**கணினி அறிவியல் ஈ பிரிவு**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## மரம்

நின்ற இடத்தில் நின்று கொண்டு
காற்றடித்தால் மட்டுமே
தலையசைத்து சிரித்து

யாரும் தன்னை
அரவணைக்காத போதும்
அலட்டிக்கொள்ளாது அமைதி காத்து
முற்றிலும் இலையுதிர்த்துப் போனாலும்
மேகம் பார்த்து மேகம் பார்த்து
நாளை நம்பிக்கை வளர்த்து
நம்பிக்கையில் உயிர் காத்து
மீண்டும் தளைத்துச் செழித்து நிற்கும்
மரமே உன்னை எண்ணி மகிழ்கிறேன்..

**வா.முனிஷ்குமார்**
**இளங்கலை நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## குழந்தை

இந்த நடக்கும் பொம்மைக்கு
பிடித்தது நடக்காத பொம்மைகள்
ஆசை உண்டு
பேராசை இல்லை..
இது ஓர் சுவாரசியமான நாவல்..
இனிப்புத் துண்டுக்கும்
நெருப்புத் துண்டுக்கும்
பேதம் தெரியாது..
விழத் தெரியும்
யாரையும் விழ வைக்கத தெரியாது
சிரிக்க வைக்கத் தெரியும்
பிறர் சிரிக்கும்படி வைக்கத தெரியாது
மழலை கொஞ்சும் தமிழை விட
இனிதென ஏதும் உண்டோ
இப்புவியில்..
குழந்தைகள் மகத்துவமிக்கவர்கள்..

**தே.தைமிலி**
**கணினி அறிவியல் ஈ பிரிவு, இளங்கலை முதலாமாண்டு**

மாணவர்களே!விடியல் இதழுக்கு அளிக்கின்ற படைப்புகள் தங்களின் சுய படைப்புகளாக இருத்தல் வேண்டும்.
ஆசிரியர்